விலை 30/=

ISSN-2613-828X

# யாழ் களரி

077-6510375

இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையம்


www.yarlgallery.com

yarlgallery@gmail.com

உதயம்: 03 | ஆவணி 2020 | களரி: 22

## யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்


### நாடாளுமன்றத் தேர்தல் - 2020



## எனது அன்புக்குரிய வாக்காளப் பெருமக்களே!
## எனது அன்புக்குரிய வர்த்தகப் பெருமக்களே!

நான் ஒரு வர்த்தகராக இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் தேர்தலில் போட்டியிடுவதற்குரிய காரணம்;

1. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் வட பகுதி மக்கள் பல்வேறு இராணுவ நடவடிக்கைகள் மூலமாக எமது தேசத்தைக் கைப் பற்றியதன்மூலம் பல்லாயிரம் கோடிரூபாய்களை எமது தேசம் இழந்து நிற்கின்றது.
2. இறுதி யுத்தத்தை முள்ளிவாய்க்கால் வரை கொண்டு சென்று, பல்லாயிரம் உயிர்களை இழந்து நிற்கும் எமது சமூகத்திற்கு ஒரு தீர்வைக் கொடுக்கவேண்டிய கட்சியாக இந்தக் கட்சி இருக்கின்றது.
3. எமது தேசத்தில் காணாமல் போனோர் மற்றும் யாழ்.குடாநாட்டில் 2006 தொடக்கம் 2009 காலப்பகுதி யில் கட்டுக்கொலை செய்யப்பட்டவர்கள் விவரங்களைத் திரட்டி அதற்கொரு ஆணைக்குழுவை அமைத்து, விசாரணை செய்யப்படவேண்டும்.
4. தமிழ்ழ வைப்பகத்தில் வைபிலிடப்பட்ட பல்லாயிரம் கோடி தங்க நகைகளை மீளளித்தல் அல்லது அதற்குரிய நஷ்டஈட்டை அரச வழங்க வேண்டும்.
5. மயிலிட்டித் துறைமுகத்தை அப்பகுதியைச் சார்ந்த கடற்தொழிலாளர் சமுதாயத்திடம் ஒப்படைக்கப் படல் வேண்டும்.
6. இராணுவத்தால் அபகரித்து வைத்திருக்கும் தனியார் காணிகளை உடனடியாக உரியவர்களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.
7. அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு முற்றுமுழுதான அபிவிருத்தித் திட்டம் கொண்டுவரப்படல் வேண்டும்.
8. எங்கள் பிரதேசத்தில் இருக்கும் அனைத்து வர்த்தகர்களின் ஒற்றுமையுடன் பங்குதாரர்களாக பல நிறுவனங்களை ஆரம்பித்து, 4 வீத வட்டி கடன் 20 ஆண்டுகால அடிப்படையில் பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பைக் கொண்ட பல தொழிற்சாலைகளை அமைத்து, இளைஞர்கள் யுவதி களுக்கு வேலை வாய்ப்பை வழங்கவேண்டும்.
9. இவைகள் யாவற்றையும் நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்புக் கூறவேண்டிய இந்தக் கட்சியிலேயே எங்களுக்கு கிடைக்க வேண்டிய சகல உரிமைகளையும் முதலீடுகளையும் அழிவுகளுக்குக் கிடைக்கவேண்டிய நஷ்டஈடுகளையும் நாடாளுமன்றத்தில் பேசிப் பெறுவதற்காகவேனக்கு உங்கள் வாக்குகளை அளிக்குமாறு தயவாக வேண்டி நிற்கின்றேன்.
10. என் அன்பான வர்த்தக மற்றும் வாக்காளப் பெருமக்களே! தற்போதைய சூழலில் உங்கள் அனைவரையும் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்காததையிட்டு மனம் வருந்துகின்றேன். தேர்தல் முடிந்த பின் 60 நாள்கள் நான் இந்த மாவட்டத்திலே தங்கியிருந்து உங்கள் எல்லோரையும் சந்தித்து, உங்கள் பிரச்சினைகள், தேவைகள் பற்றிய சகல விபரங்களையும் அறிந்து நாடாளுமன்றத்துக்குக் கொண்டு சென்று, அதற்குரிய தீர்வை எடுப்பேன் என்றும் உங்களுக்கு உறுதிபடக் கூறுகின்றேன்.



**கை** சின்னத்துக்கும் அங்கஜன் இராமநாதன் அவர்களின் வெற்றி இலக்கம் **1** இற்கும் எனது வெற்றி இலக்கமாகிய இலக்கம் **5** இற்கும் வாக்களித்து உங்கள் வெற்றியை நிலைநாட்டுங்கள்!

தமிழ்த் தேசியமும்
தமிழ்த் தாயும் வாழ்க.



ஆளும் கட்சியும் அடுத்த ஐந்தாண்டுக்கு ஆட்சியில் இருக்கப்போகும் கட்சியான எங்களுக்கு வாக்களிப்பதன் மூலம் எமது மாவட்டத்தின் பாரிய அபிவிருத்திக்கும் உரிமைகளுக்கும் வித்திடுங்கள்.

'உங்கள் வாக்கு உங்கள் உரிமை
சரியான முறையில் வாக்களியுங்கள்!'

## பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம்
### (விண்ணன்)

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

facebook.com/vinnan05

## விண்ணன்
பரநிருபசிங்கம்
வரதராஜசிங்கம்


X

5

**நீ உருவாகி பிறரை உருவாக்கு**


நாடாளுமன்ற பொதுத்தேர்தல் - 2020
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டம்
TNA
10
சிவஞானம் சிறீதரன்
M.Ed, B.A, PGDE(Mt), PGDEM, Sp. Tr(Ag)
இலங்கை தமிழ் அரசுக் கட்சி


பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ் தேர்தல் மாவட்டம்
சுயநலமற்ற, கண்ணியமான
அரசியலுக்கு...
6
7
தருமலிங்கம்
சித்தார்த்தன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
பாலச்சந்திரன்
கஜதீபன்
(முன்னாள் மாகாணசபை உறுப்பினர்)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA)


நாடாளுமன்ற தேர்தல் 2020
ஐக்கிய மக்கள் சக்தி
சஜித்
வடக்கில் ஒரு மாற்றம்
9


மாற்றத்திற்கான தலைமை
2
10
கஜேந்திரகுமார்


பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ், கிளிநொச்சி
தேர்தல் மாவட்டங்கள்
2
வீ. ஆனந்தசங்கரி
தமிழர் விடுதலைக் கூட்டணி

# யாழ் கலரி

Website: yarlgallery.com E-Mail: yarlgallery@gmail.com
Tel/Whats App/Viber: 077 6510375

ஆவணி





# ஐக்கிய இலங்கையில் நிரந்தர சமாதானம், அபிவிருத்தி ஏற்பட அரசியல் ரீதியாகவும், ஆன்ம ரீதியாகவும் எவ்வாறு செயற்படலாம்

சிவஸ்ரீ க கிருபானந்தக்குருக்கள்.
சோலை அம்மன் ஆலயம், சாவகச்சேரி.

ஐக்கிய இலங்கைக்குள் நிரந்தர சமாதானத்தையும், அபிவிருத்தியையும் ஏற்படுத்துவதற்கு அரசியல் ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் செயலாற்றுவதற்கான வழிமுறைகள் பற்றிப் பார்ப்போம். முற்காலங்களில் பலபல போர்கள் அரசியல் காரணமாக நிகழ்ந்து பல இலட்சக்கணக்கான மக்கள் மாண்டதாகப் புராதன வரலாறுகள் மூலம் அறியக் கிடக்கின்றது. உதாரணத்திற்குச் சிலுவைப்போர் முகலாயர்களின் போர்கள் மௌரிய கலிங்கப் போர்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அனைத்துப் போர்களிலும் மத ரீதியான அபிலாஷைகளே பின்னணியில் இருந்துள்ளன. முகலாயர்களின் படையெடுப்புக்களிலும் பின்னணியில் இஸ்லாமிய அடிப்படை வாதமே காரணமாக இருந்து வந்துள்ளது. தத்தமது மதச் சிறப்புக்களை நிலைநாட்டுவதன் காரணமாக இன்னும் பல பலபோர்கள் நிகழ்ந்த வண்ணம் மக்களின் அழிவிற்குக் காரணமாக உள்ளது கண்கூடு. இப்போர்கள் தொடர்கதையாக நீறுபூத்த நெருப்பாக கனன்று கொண்டிருக்கின்றது. எந்தவொரு நாட்டிலும் மக்கள் ஐக்கியமாகவும் அன்னியோன்னியமாக வாழவேண்டுமெனில் சகமக்களது மதங்களைப் புரிந்து கொண்டு சமசந்தர்ப்பங்களை வழங்கி மக்களை நல்வழிப்படுத்தினால் தான் இன ஐக்கியம் நீடிக்கும். மதங்களும் அரசியலும் வேறுவேறு பயன்பாட்டினைத் தருவனவாகும்.இந்த இரண்டு விழுமியங்களும் இரண்டு தண்டவாளங்களைப் போன்றவையாகும். இரு தண்டவாளங்களும் இணைந்தாலோ, பிரிந்து விலகிச் சென்றாலோ மக்கள் இன ஐக்கியமென்னும் தொடர் வண்டியானது சேருமிடம் சேராமல் தடம் புரண்டு போய்விடும். அரசியலானது மக்கள் அனைவரினதும் சகவாழ்வு, பொருளாதார அபிவிருத்தி , சௌக்கியம், கல்வி, தொழில் வளர்ச்சி, ஆற்றல்கள் என்பவற்றை முன்னிலைப்படுத்திப் பாரபட்சமின்றிய சேவைகளை மக்களுக்கு வழங்குதலே அடிப்படை எதிர்பார்ப்பாகும்.


(தொடர்ச்சி பக்கம் 11)



A.M.A அஸீஸ் மௌலவி (ஹாஸ்மி) யாழ்/கிளி மாவட்ட பேரவை
உலமாசபை சர்வமத சமயதலைவர். அகில இலங்கை சமாதான நீதவான்

நிரந்தர சமாதானம் இலங்கையில் உருவாக வேண்டுமென்றால் அங்கு அதை ஏற்படுத்த யார்யார் முனைப்புக் கொள்கின்றார்களோ அவர்களிடம் பொறுமை, சகிப்புத்தன்மை, சந்தர்ப்ப சூழ்நிலையைப் புரிந்து தன் செயல்படுத்தும் தன்மை, நீதி, நேர்மை, எளிமை, உண்மை என்கின்ற நற்பண்புகள் அவரிடம் ஆட்சி புரிய வேண்டும் அப்போது தான் இன, மத, பேதமற்ற எல்லோரும் ஒரு தாய் மக்கள் என்ற உணர்வுபூர்வமான உயர்வான எண்ணம் மேலோங்கி நாம் ஓர் இலங்கையர் என்ற பொதுவுடைமை அங்கே புரிந்துணர்வுடன் செயல்படச் சாத்தியமாகும். ஏனெனில் நாம் எம் பின்னால் முன்னேறி வருபவர்களுக்கோர் வழிகாட்டியாக இருந்தால் பிக்கல் பிடுங்கல் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கத் தேவையில்லை. எப்பொழுதும் வெள்ளைப் புறாவாக வாழலாம். இதே போல் தான் அபிவிருத்தியும். மனித வாழ்வானது எல்லாத்துறைகளுடனும் தொடர்பு கொண்டுள்ளது. இது செல்வாக்குச் செலுத்தாத அபிவிருத்திகள் இல்லை. இங்கே இந்த மனிதவளம் சமூகத்தையும், அரச நிர்வாக நடவடிக்கைகளையும் அனைவரும் அறிந்து தெரிந்து அதனை சமாதானமான முறையிலும் மனிதநேயத்தோடும் புனிதமான முறையில் ஒரு தலைமையின் கீழ் செயல்படுத்தினால் அபிவிருத்திகள் அழகுற அமைந்து அனைவர் அகமுகங்கள் மகிழ்வடையும் பாரபட்சம் போக்கினால் புரிந்துணர்வுகள் பூரித்தெழும். இப்போ சமாதானம் என்பது சந்தோஷமாக எம்மைச் சேரும் ஐக்கியச் சமாதானக் காற்று சூறாவளியாகி சுனாமியாக வீசும் மகிழ்ச்சி. இதையே ஆன்மீகமும் கூறுகிறது. வாழ்க்கையின் சகல கோணங்களிலும் மனிதன் சிந்தனையோடு செயலாற்ற வேண்டும் என்று. இந்த ஒரு அம்சத்தின் மூலமே பகுத்தறிவு பெற்றுள்ள மனிதன் ஏனைய உயிரினங்களை விட உயர்நிலையடைகின்றான் என்கிறது..........! இதனாலே தான் நாட்டின் தலைவரை மக்களை வழிநடத்தும் தலைவரை மக்களின் சகல விவகாரங்களிலும் இறைவழி நின்று அவர்களை வழிநடாத்தும் தலைவரை, பொறுப்புடையவரை தெரிவு செய்வதை பொதுமக்களிடம் ஒப்படைக்கிறது முக்கியம். அதற்காக சாதாரணமாக மக்கள் பின்பற்ற

(தொடர்ச்சி பக்கம் 11)



# பல்சமயத்தவர்கள் ஒரு நோக்கோடு செயற்பட வேண்டும்

அருட்தந்தை வின்சன் பற்றிக் அடிகள்

இன்றைய காலகட்டத்தில் பல ஆலயங்கள் சேர்ந்து ஒரு நோக்கோடு செயற்பட வேண்டும். சமூக ரீதியான பிரச்சினைகளுக்கு முக்கியமாக இளைஞர்கள், மாணவர்கள் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.
இதற்கு பல்சமயத்தவர்கள் ஒன்றிணைந்து விரைவில் சமூக மாற்றத்திற்கான தீர்மானத்தை எடுக்க வேண்டும். தீய சக்திகள் எல்லாம் ஒன்றிணைந்து ஒரு வலையமாக தீயவற்றை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் அவ்வாறே நல்ல சக்திகளும் ஒன்றிணைந்து வலைப்பின்னலை உருவாக்க வேண்டும். தெளிவான திட்டங்களை முடிவெடுத்து நல்ல இலக்குகளை அடைய வேண்டும். குழுப்பயிற்சிகளை இளையோர் மாணவர்களுக்கு விளக்க வேண்டும். தனி மனிதன் தீவாக முடியாது. இணைந்து செயற்பட வேண்டும். இணைவதற்கான வாய்ப்புக்களைக் கண்டு பிடிக்க வேண்டும். பேச்சாளராக இருக்காமல் செயற்படும் தலைவர்களாக சத்தியம், தர்மம், நீதிக்குக் குரல் கொடுக்க வேண்டும். சமயத் தலைவர்கள் சடங்குகளோடு மட்டும் நிற்காமல் சமயங்களுக்கு அப்பால் மனிதத்தை நேசிக்கும் மதத் தலைவர்களாக மாற வேண்டும். உறங்கு நிலையிலிருந்து விழித்தெழ வேண்டும். மனிதம் மலர மனிதத்திற்கெதிரானவற்றைக் கண்டு பிடிக்க வேண்டும். இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையத்தின் உரையாடல், உறவாடல் விடியலை விரைவில் கொண்டுவரும் என அருட்தந்தை வின்சன் பற்றிக் அடிகளார் மேலும் தெரிவித்தார்.



# ஆட்சிக்காக அரசியல் பேசாதிருந்தால் நிரந்தர சமாதானத்தை கட்டியெழுப்ப முடியும்

மிகாயந்துரே ஸ்ரீவிமலதேரர்

இலங்கையில் நிரந்தர சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு முக்கியமாக அரசியல்துறையில் ஈடுபடுபவர்களும் மற்றும் மதகுருமார்களும் ஒற்றுமையாகசெயல்படல் வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரையில் இரண்டு பிரதான மொழிகளான சிங்களம், தமிழ் காணப்படுகின்றது. அதில் இனங்களுக்கிடையில் காணப்படும் பிரச்சனைகளால் மக்கள் மனம் தாக்கப்பட்டுக் காணப்படுகின்றது. நிரந்தர சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு இலங்கையர் என்ற வகையில் உலகில் முன்னுக்குப் போக முயல வேண்டும். இனங்களுக்கிடையிலான தகராறுகளிலும், மார்க்க மதங்களுக்கிடையிலான தகராறுகள் குறைவாகவே

( தொடர்ச்சி பக்கம் 04)

# வீரமும் துணிவும் வேண்டும்

இறை பற்றுதலோடு வாழ்பவனுக்கு எத்துன்பமும் நெருங்காது. இறையேசு அருங்குறிகள் அற்புதங்கள் பல செய்து நோயாளிகளை குணப்படுத்தி துன்புறுவோரைத் தேற்றி ஆறுதல் அளித்தார்.


1985ம் ஆண்டில் புதுக்குடியிருப்பில் எமது உறவினர் இல்லத்தில் கொண்டாட்ட நிகழ்வுக்காக சென்று வீடு திரும்பும் போது காலை பஸ்பிரயாணத்தை தொடர்ந்தோம். என்னுடன் எட்டுப் பெண்கள் பரந்தன் சந்தியை மூன்று மணிக்கு வந்து சேர்ந்தோம். ஆங்காங்கே நாட்டுப் பிரச்சினைகள் நடந்து கொண்டிருக்கும் அதே வேளை போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது. நாம் யாழ்ப்பாணம் வந்து சேர வேண்டியவர்கள். கடைகள் பூட்டப்பட்ட நிலையில் உண்ண உணவின்றி மக்கள் அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருந்தனர். ஆண் துணையின்றி வந்தவர்கள் நெடு நேரம் காத்திருப்பதே நமது நாட்டில் பயங்கரமாக உள்ளது. எல்லோரும் எனது வயதிற்கு மேற்பட்டவர்கள் இனம் தெரியாதவரிடத்து யார் உதவியைக் கேட்பது. யாழ் வரவே முடியாத நிலை வேறு பயணிகளும் கலங்கி பதற்றப் பட்டனர். எனது கையில் இரண்டு வயதுக் குழந்தை ஏந்திய வண்ணம். எல்லோரும் செபம் சொல்லியபடி இருந்தனர். நான் சற்று திரும்பிப் பார்த்தேன் றெயின் நிற்பதைக் கண்டேன். வண்டி தங்குமிடமல்ல ஆயினும் வாருங்கள் என அழைத்து சென்றேன். ஸ்ரேசன் இல்லாத இடமாதலால் அங்கிருந்த ஆண்கள் சிலர் தூக்கி ஏற்ற வேண்டியதாயிற்று. அதைக் கண்ட வேறு பயணிகளும் ஏறிக் கொண்டனர். என்னுடன் வந்தவர்கள் இந்திராணி உன்னை நம்பித்தான் வாறம் எப்படியாவது கூட்டிக்கொண்டு போ என பலமுறை கவலையோடு சொன்னார்கள் யக்கச்சியில் தண்டவாளம் கழற்றப்பட்ட நிலையில் திருத்தம் செய்யப்படும் வரை காத்திருக்கும் நிலை. அத்துடன் இந்த றெயின் உத்தியோக பூர்வமாக வெளிநாட்டுப் பிரமுகர்கள் யாழ் வருவதற்கு ஸ்பெசலாக அனுப்பப்பட்டது. ரிக்கட் எடுக்கவில்லை என நாங்கள் இருக்கிறம் பயப்படாதீர்கள் என்றனர். யக்கச்சியில் பிரச்சினை நடந்தமையால் பயம் ஆட்கொண்டது. அந்த இடம் கழிந்த பின் நிம்மதி வந்தது. எதிர்பாராத விதமாக இறையருள் அங்கே பொழியப்பட்டு பாதுகாப்பாக யாழ் வந்தடைந்தோம்.

ஒரு முறை எனது கை வீங்கி அசைக்கமுடியாத நிலையில் வைத்தியசாலையில் கிளினிக் திகதி போட்டு தந்தமையால் காலை 18ம் நம்பருடன் காத்திருந்து தாதியிடம் பதிவு செய்யப் போனேன். அவர் இதற்கு முதற் காட்டிய துண்டைக் கொண்டு வந்தால் தான் பதியும் படி டாக்டர் சொல்லியுள்ளார். இது தான் புதிதாகக் காட்டுகின்றேன் என்று சொல்லவும் இல்லை என அடம் பிடித்தார். தவிர்க்கமுடியாமல் 12 வருடத்திற்கு முன் காட்டியது. அது வேறு நோய் எனவும், இடம் பெயர்வுகளினால் அது எங்கே என்று தெரியவில்லை என்றதும் இன்னும் 10 நாள் கழித்து திகதி போட்டுத் தந்து பழைய காட்டுடன் வரவும் என்றனர். அன்றே தாங்க முடியாத வருத்தத்தை 10 நாட்கள் எப்படித் தாங்குவது மனிதரின் குறை தீர்க்கும் மருத்துவர் நோய் அறிந்து செயற்பட வேண்டுமல்லவா என அழுது கொண்டே வெளியேறினேன். மருந்துக்கடையில் குளிசை வாங்கிப் பாவித்து மூன்று நாட்களில் சுகமடைந்தேன். எதற்கும் சமயோசித புத்தி வேண்டும்.

2006ம் ஆண்டு சித்திரை மாதம் என்னுடன் இரு பிள்ளைகளும் கம்பகா செல்வதற்காக வவுனியாவில் இருந்து இறயினில் சென்றோம். அதிலும் ஆறு பெண்கள் என்னுடன் இணைந்து கொண்டனர். புறப்படும் போதே செபமாலை தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தேன். வண்டி ஆடிய ஆட்டம் ஏதே நடக்கப் போவது போல் மனம் சொல்லிக் கொண்டது. அனுராதபுரம் சென்றதும் லீவுக்காக செல்லும் இராணுவத்தினர் ஏறிக் கொண்டனர். அவர்களுக்கு என் இடத்தைக் கொடுத்து வேறு இடத்தில் அமர்ந்தேன். அதிகாலை 4.30 மணி ஒலி பெருக்கி மூலம் கம்பகா என அறிவிக்கப்பட்டது. இரு பிள்ளைகளும் இறங்கி விட்டனர். றெயின் புறப்படத் தொடங்கி விட்டது. இருவர் என்னைப் பிடித்து இறக்க முற்பட்டனர் நான் மறுக்கவும் நாங்கள் இறக்கி விடுவம் பயப்படாது இறங்குங்கள் என்றதால் பிளாட்போமில் கால்களை வைத்தது இழுபட்டு போகின்றது. அவர்கள் சொல்லைக் கேட்டு மூன்று முறை கால்களை வைத்தேன். முடியவில்லை இரு கால்களும் கீழே இறங்கி விட்டது. எதிலும் ஊன்றித் தொடமுடியாத நிலையில் வண்டி வேகம் அதிகரிக்கவே என்னைச் சுழற்றி அடித்தது. ஒரு கை கம்பியைப் பிடித்தபடியே தொங்கினேன். என் குடும்பத்தை ஒரு கணம் நினைத்தேன் இத்துடன் எல்லாம் முடிந்தது என நினைக்கும் போது ஆண்டவரே மாதாவே என உச்சரித்ததும் தூக்கு என்றேன் இறங்க உதவி செய்ய வந்தவர் என் கையைப் பிடித்துத் தூக்கி உள்ளே போட்டார். படிகளில் அடிபட்ட நிலையில் கால்கள் இருந்ததே தெரியவில்லை நாவுலர்ந்து கல்லாகி விட்டது. தண்ணி தாருங்கள் என கேட்டதும் குடித்த பின் ஆறு பெண்களும் உங்களை நம்பி நாங்கள் வர நீங்கள் ஏன் இடையில் இறங்கினீர்கள் என கவலையோடு கேட்டனர்.

பிள்ளைகள் கம்பகாவில் இறங்கியதால் ராகம போய் அடுத்த றயிலில் திரும்புமாறு சொல்லினர். இராணுவத்தினர் ஒருவர் என்னை அழைத்து வந்து ஸ்ரேசன் காவலரிடம் 'திருப்பி அனுப்ப உதவுமாறு கூறினார். ஆனால் அவரோ ஏதும் பேச முடியவில்லை தமிழ் தெரியாது சிங்கள ஏரியா நானாகவே சென்று ஸ்ரேசன் மாஸ்டரிடம் கேட்டு கம்பகா நம்பரும் திரும்புவ தற்குரிய ரிக்கட்டையும் எடுத்து வந்து றெயினிற்குக் காத்திருப்பவரிடம் போனில் கதைக்கும் படி நம்பரைக் கொடுத்தேன். கதைக்கும் போது யன்னல் அருகே இருந்த என் மகள் சிங்களம் தெரிந்தபடியால் என் அம்மா தான் என்று போனை வாங்கி என்னுடன் கதைத்தா. அவர்களிற்கு என்ன நடந்தது என்று தெரியாது வந்து சொல்லுகிறேன் அங்கேயே இருங்கள் என்றேன். இனம் தெரியாத இடத்தில் இரவு வேளை இறைவன் தான் உள்ளங் கையில் என்னைத் தாங்கி உயிர், உடல், பணம், பொருள் எதுவும் சேதமடையா வண்ணம் பிள்ளை களுடன் சேர்த்துவைத்த இறைவனை என்னாளும் மறவாது நன்றி கூறுகின்றேன். இத்தனை வருடமும் மறக்க முடியாத நிகழ்வை யாழ் களரியின் வாயிலாக வெளிப்படுத்து வதில் மன நிறைவடைகின்றேன்.

கொழும்புத்துறை
- G.இந்திராணி -



# யாழ்ப்பாணச் சரித்திரத்தில் நாகர் காலம்


இப்போது குடா நாடாக இருக்கும் யாழ்ப்பாணம் கிறீஸ்துவுக்கு முன்னம் இரண்டு தீவுகளாகவிருந்தது. மேற்கே நாகதீவம், மணிநாகதீவம் ,மணிப்புரம் , மணிமல்லவம் என்னும் பெயர்களால் வழங்கப்பட்ட பெருந்தீவு கிழக்கே எருமை முல்லைத் தீவு எருமைதீவு என்று பெயர் பெற்ற சிறு தீவும் ஆக இரு பிர்வாக இருந்தது. காலம் தோறும் பூகம்பங்களினாலும் பிரளயங்களினாலும் அழிக்கப்பட்டு மேற்கே ஒன்றாய் இருந்த பெருந்தீவகம் பல தீவுகளாகப் பிரிக்கப்பட்டது.

**(கி.மு மூன்றாம் நூற்றாண்டிலே திஸ்ஸன் என்னும் நாகவரசன் கல்யாணியில் அரசாண்ட காலத்தில் ஏற்பட்ட கடற்கோளில் இத் தீவகம் பிரிக்கப் பட்டிருக்கலாம். கி.பி 1500 ஆண்டளவிலும் காவிரிப் பூம்பட்டினம் இந்தியாவிலும், இலங்கையிலும் பெரும் பாகங்கள் கடல்வாய்ப்பட்ட போது இத் தீவும் பிரிக்கப் பட்டிருக்கலாம் என முதலியார் செ.இராசநாயகம் குறிப்பிட்டுள்ளார். முதலியார் அவர்களின் ஆய்வை அடிப்படையாகக் கொண்டு இத் தொடர் அமைகின்றது.)**

அந்த வகையில் காரைதீவு, வேலணை, மண்டைதீவு, புங்குடுதீவு, அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு, முதலிய தீவுகளும், வலிகாமமும் அத்தீவுகளின் பகுதிகளாகவிருந்தது. அவ்வாறே கிழக்கே ஒன்றாய் இருந்த சிறுதீவகம், களப்புக் கடலால் வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப் பள்ளி என்னும் பிரிவுகளாக பிரிக்கப் பட்டது.

பண்ணைக்கடல், பூநகரிக்கடல், ஆனையிறவுக் கடல் என்னும் களப்புக் கடல்கள் முன்னே வங்காளக் குடா கடலுடன் சேர்ந்து ஆழமும் அகலமும் உள்ளனவாய் இருந்தது. மேலைத் தேசங்களினதும் சீனம் முதலிய கீழைத் தேசங்களில் இருந்தும் போக்குவரத்து செய்யும் கப்பல்களும் பெரும் வழியாகவும் சோளகம், வாடைக் காற்றுக்கள் தொடங்கும் காலங்களில் உண்டாகும் புயல்களிற்கு அக் கப்பல்கள் ஒதுக்கிடமாகவும் , உறைவிடமாகவும் இருந்தன. இத் தீவுகள் வட பக்கத்திலே முருங்கைக் கற் பூச்சிகளினால் உண்டாக்கப்படும் கற்பறைகளினாலும் தென் பாகத்திலே சோளகக் காத்தினால் கொண்டு வரப்படும் மணலினாலும் வர வர உயர்ந்தும் அகன்றும் வருகின்றன. வங்காளக் குடாக் கடலின் அலைகளால் ஒதுக்கப்படும் மணற்றிரலால் ஆனையிறவு கடலின் கீழ்முகம் தூர்ந்தும் மேடுபட்டு இப்போது யாழ்ப்பாணம் குடாநாடாகிவிட்டது.

யாழ்ப்பாணம் முன்பிருந்த சொற்ப பாகங்கள் தவிர மிகுதியான நிலம் முருங்கைக்கற்பாரின் மேலதே யாழ்ப்பாணத்தின் வட கடற்கரையில் நிலத்தினின்றும் கடலுட் பாயும் பல அருவிகளான கீரிமலையிலுள்ள அருவியானது புராதன காலம் தொட்டு மிகவும் பரிசுத்த தீர்த்தமாகக் கொண்டாடப் பட்டது. நாகுலம் என்னும் இதன் பழைய பெயர் நகுலம் என மருவி பின் தமிழில் கீரிமலையாயிற்று. இத் தீவின் ஒரு பகுதி சரித்திரத்திற்கு முந்தியே நாகர் என்னும் ஒரு சாதியர் குடியேறியிருந் தார்கள். இத் தீவுகளிற்கு இப்போது கந்தரோடை என்று அழைக்கப்படும் கதிரமலையே இராசதானியாக விருந்தது. கிறிஸ்துவுக்கு முன் 1500 வருடங்களிற்கு முன் வட இந்தியாவிலிருந்து அரசாண்ட பாண்டவர்களில் ஒருவனாகிய அருச்சுணன் தீர்த்த யாத்திரை காரணமாக



வந்து ஒரு பூங்காவனத்தில் தனியே உலாவிய சித்திராஸ் கதை என்னும் நாக கன்னிகையைக் கண்டு காதல் கொண்டு அவளை மணந்தான் என்பதும் அவளுக்குப் பிறந்த சித்திரவாகன் அரசனாயிருந்தபோது அஸ்வமேத யாகஞ் செய்த தன் தகப்பனாகிய அருச்சுணனை வென்றான் என்பதும் அவனுடைய கொடிகள் சிங்க கொடி யும் பனைக் கொடியுமென்பதை மகாபாரதத்தில் அறிய லாம். ஆகவே யாழ்ப்பாணமாகிய மணிப்புரத்தில் வசித்த நாகர் சீர்திருத்தமுடையவர்கள் என்பதும் இங்கே அரசாண்ட நாகவரசன் புத்திரர் ஆகிய வமசகுமாரனாகிய அருச்சுணன் மனதைக் கவரவல்ல வனப்பும் சீரும் உடையவனாய் இருந்தான் என்பது தெளிவு.

அயோத்தி அரசனாகிய இராமனால் கொல்லப் பட்ட இராவணன் இயக்க குலத்தைச் சேர்ந்தவர்களே இராமாயண காலத்தில் இலங்கையின் வட மேற்கு கரையிலுள்ளதும் இப்போது மாதோட்டம் என்று அழைக்கப்படும் மாந்தை என்னும் நகரத்தில் ஆட்சி செய்த தேவநம்பியரின் கன்னிகைகளே மண்டோதரியும், சிறிய தந்தை மகளாகிய தேவி சித்திரரேகையும் ஆவார்கள்.

பின்னொரு காலமாகப் பீனீசியர் என்னும் எபிரேயதேவாசிகள் இந்தியா, இலங்கையுடன் கப்பல் மார்க்கமாக வாணிபம் நடாத்தி வந்தார்கள் விவிலிய நூலில் ஒவிர் தேசத்திலிருந்து பொன்னும், வெள்ளியும், தங்கமும், குரங்கு நீர் தோகையும் கொண்டு வரப்படும். என்று சொல்லப்பட்ட ஓவியர் தேசம் ஓவியராகிய நாகர் வாழ்ந்த மாந்தையே. எபிரேய மொழியில் தந்தத்திற்கும், குரங்கிற்கும் அகிலுக்கும் மயிலுக்கும் பாவிக்கப் படும் சொற்கள் இபம், கபி, அகில், தோகை என்னும் தமிழ்ச் சொற்களே அது போலவே கிரேக்கர் அரிசி, இஞ்சிவேர், கறுவா என்னும் பண்டங்களையும் அவற்றின் தமிழ்ச் சொற்களும் கொண்டு சென்றார்கள்.

ஓவியரல்லாத மறுநாகர் வகுப்பைச் சேர்ந்த அரசர்கள் கதிரமலையாகிய கந்தரோடையிலும் எருமையூர் என்றழைக்கப்பட்ட எருமை முல்லைத் தீவிலும் குதிரை மலையிலிருந்தும் அரசாண்டார் கள்.

சாக்கிய புத்த தேவர் தமது காலத்தில் இலங்கைக்கு மும்முறை வந்தவரென மகா வம்சத்தி லும் அதில் இரண்டாம் முறை மணி பல்லவமென்றும் தமிழ் நூல்களிலும் நாக தீபம் என்று சிங்கள இதிகாசங்களிலும் கூறப்படுகின்றன. இத்தீவிலே இறங்கி நாகவரசர்களது பிணக்கைப் போக்கியவர்கள் தத்தமக்கு உரிமையாக்க வேண்டிப் போர் புரிந்த வேளை மூன்று கோடி நாகர்களிற்கும் தமது தர்மத்தைப் போதித்தனரென மணிமேகலையிலும் மகாவம்சத்திலும் கூறப் பட்டிருக்கின்றது.

கலிங்க தேசத்து சிங்கவாகு என்பான் தனது புத்திரன் விஜயனது தீயொழுக்கம் காரணமாக அவனையும் தோழர் எழுநூற்றுவரையும் மூன்று கப்பல்களில் ஏற்றி தன் நாட்டினின்று துரத்தி விட்டான்

யாழ் களரி
Website: yarlgallery.com E-Mail: yarlgallery@gmail.com
Tel/Whats App/Viber: 077 6510375
பிரதம ஆசிரியர்: ஜோர்ச் ஜெஸ்ரின் |
பொறுப்பாசிரியர்கள்: வே.சஞ்சீவதனுசன் | செ.யோசப்பாலா
வெளியீடு மற்றும் தொடர்பு முகவரி: ராகஸ்வரம் கலைமன்றம் |
இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையம்
28/1 A.V வீதி, கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

## “எல்லாம் கடந்து போகும்”

மக்களுக்காகத் தெரிவு செய்யப்பட்டு நாடாளுமன்றம் செல்லும் வடகிழக்கு மாகாண தமிழ்பிரதிநிதிகளே, உங்கள் கடந்த காலம் எதுவாக இருந்தாலும் எமக்குள்ள தூரநோக்கு ஒன்றாக செயல்பட திடசங்கற்பம் எடுங்கள்.

எல்லோரின் எதிர்பார்பப்பும் தூரநோக்கும் தமிழன் தலைநிமிர்ந்து வாழ தன்மானத்துடன் வாழ சுயமரியாதையுடன் வாழும் தனித்துவத்தை நிலைநாட்ட வேண்டிய பொறுப்புக்களையேற்று மக்கள் பிரதிநிதியாகச் செல்லும் சிறப்பை தமிழினத்தின் விடிவுக்காக அரசியல், பொருளாதார, சமூக விடுதலையை உங்கள் சொல், செயல், வாழ்வால் முன்மாதிரியாக வெளிப்படுத்தி நாகரீகமான சமூகத்தின் பிரதிநிதிகளாக குரல் கொடுங்கள்.

உள்ளூர் முரண்பாடான கருத்து மோதல் சமய, சமூக, பிரதேச பாகுபாடுகளை பொதுவெளியில் ஒருவர் மற்றவர்கள் மீது தூற்றி எமக்குள்ளேயே முரண்படாது நாகரீகமான முறையில் நட்புறவை பேணி தமிழினத்தின் கௌரவ பிரசைகளின் பிரதிநிதிகளாக எதிரிகளையும் நாகரீகமான முறையில் நட்புறவால் கருத்துக்களை கருத்துக்களால் வெளிப்படுத்தி இன விடுதலைக்காக இளையோர் எதிர்காலத்துக்காக வலிகளில் இருந்து மீண்டு எழும்பி தன்னம்பிக்கையுடன் தன்மானத்துடன் வாழும் உரிமையைக் காப்பாற்றும் மக்கள் சுபீட்சத்துக்காக அர்ப்பணிப்போடு செயல்பட முன்வாருங்கள்.

வெற்றி தோல்விகள் எமக்குத் கற்றுத்தந்த பாடங்கள் அதிகம் அதிலிருந்து மீண்ட வலிமையான பலம் ஒன்றே எமது மூலதனம். எல்லாம் கடந்துபோகும் என்ற தாரக மந்திரம் வாழ்வில் அனுபவித்த வரலாறுடைய தமிழினத்திற்கு போரும், சுனாமியும், இடப்பெயர்வுகளும் எம்மை சிதைத்து விடவில்லை. மீண்டும் எழுவோம் பீனிக்ஸ் பறவைகள் போல என மாற்றங்களை முன்னேற்றத்தின் மூலதனமாக்கி வெல்லும் பாதையில் பயணிப்போம்.

மூத்தோர், இளையோர், வசதி படைத்தோர், ஏழைகள் எவருடனும் பண்பான பணிவான நட்புறவைப் பேணும் நாகரீகத்தை நாடாளுமன்றம் செல்வோரும் தமது பதவிக் காலத்தில் புத்தூக்கம் அளிக்கும் செயல்களால் தன்னம்பிக்கையூட்டுவோராக செயற்பட்டு மக்களின் மனநிலைக்கேற்ப தூரநோக்கை நோக்கி நகரும் வழிகாட்டி யாக, மக்கள் பிரதிநிதிகள் ஒன்றுபட்டு செயல்பட எதிர்பார்க்கிறோம்.

எமக்குள்ள முரண்கள் போட்டி மனப்பான்மைகளை அங்கு சென்றும் தொடராது எம்மினத்தின் மானம், மரியாதை, விடுதலை வாழ்வை சுவைக்கும் வழிகளை ஒன்று பட்ட குரலாக ஓங்கி ஒலிக்க முன்வாருங்கள். எல்லாம் கடந்து போகும், நற்செயல்களே நின்று நிலைக்கும்.

# எம் அனைவருக்கும் சொந்தமான இந்த நாட்டில் நாம் நல்லிணக்கத்தோடு வாழ்வோம்.

செல்வி M.N.F நூஹறா
தரம்-II, யா/ஒஸ்மானியா கல்லூரி

உலகம் படைக்கப்பட்டது உயிரினங்க ளுக்காக மனிதர்கள் அவற்றுள் விசேடமாக ஆறறிவு படைத்தவர்கள். மனிதர்கள் உலகத்தில் செய்யும் செயல்கள் நல்லிணக் கத்திற்காகவே என்ற எண்ணம் நம் அனைவரது உள்ளத் திலும் வற்றாத ஊற்றாக உதிக்க வேண்டும்.

இன்றைய கால கட்டங்களில் அறிவுத்திறன் படைத்தோர், சிந்தனையாளர்கள், புத்திஜீவிகள் அனைவரும் நாட்டில் அமைதியையே விளைவிக் கின்றார்கள். அது மறுப்பதற்கில்லை. ஏனைய சமய இலக்கிய கலைத்துறையிலேயே இருப்பவர்கள் என்ன கூறுகின்றனர் என்றால் “உயர்ந்தவர் என்ன? தாழ்ந்தவர்



என்ன? உடல் மட்டும் சிவப்பாக இருந்தால் அனைவரும் ஒன்று என்று ஆகிவிட முடியாது. பொதுவாக இலங்கை போன்ற தொரு நாட்டினை எடுத்து நோக்குவோமாக இருந்தால் இங்கு வாழ்பவர்கள் பெரும்பான்மை யான அளவு சிங்களவர்கள் வசிக்கின்றார்கள். சிறுபான்மை யான அளவு தமிழர். இதற்கிடையில் முஸ்லிம் கிறிஸ்தவர்கள் வசிக்கின்றார்கள். எது எப்படி இருந்தாலும் இலங்கை பெற்றெடுத்த பிள்ளைகள் என எண்ணினால் நாம் நாட்டில் மத நல்லிணக்கத்தை கொண்டுவரலாம்.

மத நல்லிணக்கம் என்ற ரீதியில் இன்று தத்தமது மதக்கோட்பாடுகளை மட்டுமே முன்வைத்து உரையாற்றுகின்ற போது அங்கு பிளவு மீறப்படுகின்றன. எனவே தான் நாம் அனைவரும் சகிப்புத்தன்மை என்ற ஒன்றை நாம் கடைப்பிடித்து ஒழுக வேண்டியுள்ளது. முஸ்லிம், தமிழர், கிறிஸ்தவர், சிங்களவர் என்ற பிரிவுகள் பார்க்கா மல் அனைவரும் ஒற்றுமையாக இருந்து எமக்குச் சொந்தமான இந்நாட்டில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். வேற்றுமை பாராட்டாத வேறுபாடுகளில் கூறுபடாத ஒற்றுமையே சமூக நல்லிணக் கத்தின் அடிப்படை யில் அந்த அடித்தளத்தில் அமைந்த நல்லிணக்கமே வளர்ச்சிக்கு வழிவகுத்து நாட்டு முன்னேற்றத்திற்கு உதவும்.

எம் நாட்டில் பிறந்த எல்லா மக்களும் ஒரு தாய் மக்கள் அதாவது முஸ்லிம்களால் கூறப்படும் ஆதாம் அலை கிறிஸ்தவ மக்களால் ஏவாள் என்று சொல்லப்படும் கௌவா அலை ஆகியோர் முதன் முதலில் படைக்கப்பட்ட மனிதர்கள். இதனை நாம் அனைவரும் ஏற்றுக் கொண்டால் நம் நாட்டில் மத நல்லிணக்கத்தை கொண்டுவரலாம்.

இன்று நவீன காலத்தில் உலகாயுத சிந்தனைகளே மேலோங்குகின்றது. உலக நாடுகளில் கூட தீவிரவாதக் குழுக்கள் என பெயர் பொதிக்கப்பட்டவர்கள் அனைத்து மதத்திலும் கலந்து இருக்கிறார்கள். இதே போன்று இனவாதக் குழுக்கள் என்ற ரீதியில் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றனர். எமது நாடான இலங்கையை நோக்கமாக இருந்தால் இங்கு அதிகமான மக்கள் சமாதானத்தை மட்டுமே விரும்புகின்றனர். ஆனால் தமது மார்க்கத்தை அரைகுறையாகப் படித்த சில மார்க்கத்தலைவர்கள் என்ற நாமம் பொறிக்கப்பட்ட கும்பல்கள் பிரச்சனைகளை குறிக்கோளாக வைத்து மத நல்லிணக்கத்தினைச் சிதைக்கின்றார்கள். இதன் மூலம் நாடு குட்டிச் சுவராகி விடும். நல்லவர்களாகவும், பண்பானவர் களாகவும் விளங்கும் அனைத்து மதத்தவர்களும் பாதிக்கப்படுகின்றார்கள்.

ஒவ்வொரு மதங்களும் நல்ல வழி முறைகளாய் மக்களுக்கு வலியுறுத்துகின்றது. இந்த வகையில் முஸ்லிம் மதம் இதனைப் போதிக்கின்றது. வள்ளல் நபி அவர்கள் ஒற்றுமையை வலியுறுத்தினார்கள். நபி பட்டம் பெறுவதற்கு முன்னரே முஹம்மது நபி அவர்கள் அரபி சமூகங்களுக்கு இடையே நிலவிய கருத்து மோதல்களையும் மோதல்களினால் உண்டான விளைவுகளையும் பிறரின் விளைவாய் தோன்றிய பகையையும் நீக்கிப் போக்கி அமைதியை ஏற்படுத்தினார்கள். சுற்றுப்புற ஒற்றுமையால் சூழலைச் சுகமானதாக ஆக்கினார்கள். புனித கஃபாவை புனரமைத்துக் கட்டி ஹஜருல் அஸவத் கல்லைக்·கஃபாவில் பதிக்கும் வாய்ப்பை அவர்களுக்கே தரவேண்டும் என்று ஒவ்வொரு குலப்பிரிவினரின் தலைவர்களும் உரிமை கோரி மோதல் உண்டாக இருந்தது. காலையில் முதலில் கஃபாவிற்கு வந்த இளைஞர் முஹம்மது நபி அவர்களுக்கு இந்த வாய்ப்பு கிடைத்தது. ஒற்றமையை ஏற்படுத்தி நல்லிணக்கத்தை உருவாக்க உத்தம நபி அவர்கள் ஒரு துணியில் ஹஜருல் அஸ்வர் கல்லை வைத்து அனைவரும் அத் துணியை பிடித்து கஃபாவில் கல்லைப் பதித்து ஒற்றுமையின் வெற்றியை அந்த அரபியுர்களுக்கு புரிய வைத்தார்கள்.

இதனைப் போன்று கிறிஸ்தவசமய மக்கள் புனித நூலாக கருதப்படும் பைபிளில் மத்தேயு 18:21-35 லில் கூறப்படுகின்ற போதனை சகோதரர்களுக்கு இடையில் பிரச்சனை வந்தால் அதை அவர்கள் இருவரும் பேசி சரி செய்து கொள்ள வேண்டும். என்று இயேசு சொன்னதை பேதுரு கேட்டிருந்தார். ஆனாலும் எத்தனை தடைவ இப்படி முயற்சி எடுக்க வேண்டும். என்று தெரிந்து கொள்ள விரும்பியிருக்கலாம். அதனால் அவர் இயேசுவிடம் போய்"எஜமானே! எனக்கு விரோதமாக என் சகோதரன் பாவம் செய்தால் நான் எத்தனை தடவை அவனை மன்னிக்க வேண்டும். ஏழு தடவையா? என்று கேட்டார். மதத்தலைவர்கள் சிலர் 3 தடவை மன்னித்தால் போதும் என்று கற்பித்தார்கள். அதனால் ஒரு சகோதரனை ஏழு தடவை மன்னிப்பதன் மூலம் தான் ரொம்பத் தாராளமாக நடந்து கொள்வதாக பேதுரு நினைத்திருக்கலாம். ஆனால் மற்றவர்கள் எத்தனை தடவை தவறு செய்தவர்கள் என்று கணக்கு வைத்துக் கொள்ளும் படி இயேசு கற்பிக்கவில்லை. அதனால் அவர் “7 தடவை அல்ல 77 தடவை என்று நான் உனக்கு சொல்கின்றேன் என்று சொல்லி பேதுருவைக் திருத்துகிறார். (மத்.18:22) இவ்வாறு இருவருக்கிடையில் ஏற்பாடு பிரச்சினைகளுக்கு கூட 77 தடவைகள் மன்னிப்பு வழங்குமாறு கூறுகின்றார் இயேசு.

இதில் கூறப்படும் விடயத்தை கூட மனிதர் களுக்கு இடையில் ஏற்படும் பிளவுகளை உண்டாக் காமல் நல்லிணக்கத்தை உண்டாக்குவதற்கு என்று நாம் கலுத வேண்டும். ஒரு தனி மனிதன் நல்வழி நடந்தால் அவனைப் பார்த்து அவன் பிள்ளை, மனைவி, சகோதரஉ, சகோதரி இன்றும் அவனைச் சூழவுள்ளவர்கள் மாறுவார்கள் எனவே தான் ஒரு பழமொழி உண்டு. உன்னைப் பார்ப்பதாக இருந்தால் உனது நண்பனைப் பார்க்க வேண்டும் என்பார்கள். எனவே நமது நற்செயல்கள் நமது குடும்பத்தையும் மாற்ற வேண்டும். ஒரு குடும்பம் சீர் திருந்தினால் ஓர் ஊர் திருந்தும் ஊர் மாறினால் நமது நாடு மாறும் என்ற அடிப்படையில் நாமும் ஒற்றுமையைப் பின்பற்றுவோம். அத்தோடு நம்மைச் சார்ந்தவர்களையும் பின்பற்றத் தூண்டு வோம். அப்போது தானாகவே நமது நாட்டில் நல்லிணக்கம் உண்டாகும். சாந்தியும் சமாதான மும் நிலவும் நாடு அமைதி பெறும். இந்த நிலை யை அடைவதற்கு சிறுவயதில் இருந்தே நல்ல ஒழுக்க விழுமியங்கள் உள்ளவர்களாக ஒவ்வொரு தாய் தந்தையும் பிள்ளைகளை மிக்க கவனத்துடன் வளர்க்க வேண்டும். இது ஒவ்வொருவரினதும் தலையாய கடமை. பெற்றார் இதை கவனத்தில் கொண்டு கண்ணியத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று இந்த கட்டுரையின் மூலம் வலியுறுத்துகின்றேன்.

## இன்றைய சமூகத்தில் உளவியல் தாக்கங்கள் எவை?

# அதற்கு சமயம், சமூகம், தனிநபர் தீர்வு குறித்து எவ்விதமாக அணுகலாம்

நேர்காணல் மற்றும் ஒளிப்படம் ஜோ.ஜெஸ்ரின்

### நேர்நோக்கித் திசைதிரும்பல்



"இன்றைய சமூகத்தில் குழுச்சண்டைகள், சிறுவர், சிறுமியர் பாலியல் துன்புறுத்தல்கள், போதை வஸ்து பாவிப்பதனால் ஏற்படும் பக்க விளைவுகள் மற்றும் மனச்சான்றுக்கு விரோதமாக செயல்படல், வன்முறைகள், ஏமாற்றுதல் போன்றவற்றைக் காண்கின்றோம். அதற்கு மதங்கள் தொடர்பாடலை இளைஞர், யுவதிகள் மட்டில் ஏறபடுத்த வேண்டும். ஆலயம், கோவில் மட்டங்கள விளையாட்டுக்கள் போட்டிகளை வைத்து நல் விழுமியங்களைக் கொடுப்பதுடன் சடங்குகளிற்கு அப்பால் சென்று ஆன்மீகத்தை வளர்க்க வேண்டும்.

குடும்பங்களின் பங்களிப்பு மிக முக்கியம். குடும்ப பிரிவுகள் பிள்ளைகளிடம் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றது. தவறு செய்பவர்களைச் சமூகம் அணுகி அவர்களை திருத்த முற்பட வேண்டும். பெரியவர்கள், மதத் தலைவர்கள் முன்மாதிரியாக வாழுதல் மூலம் ஓர் உயர் வகிபாகத்தை வழங்கலாம். அதற்கமைய நாம் பெண்கள், இளைஞர் குழுக்களை அமைத்து அவர்கள் மூலம் பிரச்சனைகளிற்கு தீர்வு வழங்கி குழுச்செயற்பாடுகள் மூலம் நேர்நோக்கித் "திசைதிருப்பலாம்" என்றார்.

*அருட்பணி சி.ஜொ.ஜெயக்குமார்,*
யாழ் மாவட்ட சர்வமத ஒன்றியத்தலைவர்.

### சுகமாகவும் சமூகமாகவும் பழகுதல்



"இன்றைய சமூகத்தில் தோற்றுப்போனோம் என்ற தாக்கம். யாருமே உதவி செய்ய இல்லையே என்ற உணர்வு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காத தன்மை போன்றவற்றைக் காண்கின்றோம்.

சமயம், சமத்துவத்தைப் போதிக்க வேண்டும். சமயத்தலைவர்கள் சரி சமமாக நடாத்தி மனிதத்தை மதிக்கப் பழக வேண்டும். சமூகங்களிடையே உயர்வு மனப்பான்மை, தாழ்வு மனப்பான்மை இல்லாதவர்களாக சமூக விழிப்புணர்வுடனும் சமத்துவத்துடனும் மக்களை அணுக வேண்டும்.

நான் என்னால் இயன்றளவு சக மனிதர்களுடன் சுமூகமாகப் பழக முயற்சிகள் செய்கின்றேன். மற்றவர்களை மதிக்க வேண்டும் என்று போதிக்கின்றேன்" என்றார்.

*அருட்பணி இமானுவேல் செபமாலை,*
மன்னார் பிரஜைகள் குழுத்தலைவர்.
தோட்டவெளிப் பங்குத்தந்தை

### அடக்கி வாசித்தல்



"இன்றைய சமூகத்தில் தோல்வி, தாழ்வு மகப்பான்மை, மூத்தோர் குடி, வெறி, இளையோர் போதை, பாலியல் வன்முறைகள், சிறுவர் துஸ்பிரயோகங்கள், உளவியல் தாககங்கள் போன்றன தொடர்கின்றன. சமயம் வலுவற்ற நிலையில் வரையறுக்கப்பட்ட அணுகுமுறையைப் பின்பற்றலாம். இருந்தும் சில குழுக்கள், புத்தியீவிகள் ஆன்மீக பலத்தோடு அணுகலாம். கீழ் மட்டக் குழுக்களுக்கு விழிப்புணர்ச்சி அவசியம்.

நான் யாவருக்கும் கூறுவது: அடக்கி வாசிப்பது நல்லது. ஆழ்ந்த சிந்தனை, அமைதி பேரமைதியுடன் பணியாற்ற வேண்டும். நானும் என் பயணமும் இவ்விதமே!" என்று விழித்தார்.

*சுவாமி,*
*கலாநிதி ஜெ.இ.ஜெயசீலன்.*

### நம்பிக்கை ஊட்டல்



"இன்றைய சமூகத்தில் பெற்றோரை, உறவுகளை இழந்தமையால் தனிமையும் வெறுப்பும் காணப்படுகின்றன. ஊரை விட்டு வெளியேறியமையால் கல்வி இழப்பு, வேலை வாய்ப்பு இன்மை, ஆதரவின்மை, விரக்தி போன்றன காணப்படுகின்றன. அதற்கு சமயம் நல்ல ஆலோசனைகளை வழங்கி, இறை நம்பிக்கை மற்றும் இறை உதவி பற்றி நம்பிக்கை ஊட்டல், பௌதீக வளங்களை வழங்கி உள ஆற்றுப்படுத்தல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும்.

இவற்றுக்கான சமூக ஆதரவளித்தல், நம்பிக்கை ஊட்டல், பௌதீக வளங்களுக்கான வழிகாட்டுதல் போன்றவற்றைச் செய்து வருகின்றேன்" என்றார். சர்வமத அமைப்பு பிரஜைகள் குழுவைச் சேர்ந்த சமயத்தலைவர்.

*மௌலவி செ.அசீம்,*
மன்னார்.

### அன்புவழி!



"இன்றைய சமூகம் மன அழுத்தம், புறக்கணிப்பு, குற்ற உணர்வு போன்ற காரணிகளால் பாதிப்புக்குள்ளாகி வருகின்றது. இதற்கு ஆன்மீக ஈடுபாடுகள், அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்குதல், தியானம், யோகா போன்ற சாத்வீகமான வழிகளால் ஆற்றுப்படுத்தலையும் அன்பு வழியையும் காட்ட வேண்டும். நான் எனது பிரச்சனைகளிற்குத் தீர்வாக நெருக்கமான நம்பிக்கையான உறவுகளிடம் பகிர்வதன் மூலமும் மனதை உற்சாகப்படுத்தும் பிற விடயங்களில் ஈடுபடுவது, குறிப்பாக வாசப்பு, சமூக வலைத்தளம் போன்றவற்றின் மூலமும் உள சமூக வளப்படுத்தலை மேற்கொள்ளலாம்" என்கிறார்.

*செல்வி வைதேகி,*
சமூக சேவையாளரும் விவசாயப் பட்டதாரி.

### உதவி செய்யும் மனப்பான்மை



"இன்றைய சமூகத்தில் இளைஞர்களிற்கு வேலையில்லாப் பிரச்சனை, வேலை தேடுவதில் அக்கறையற்ற தன்மை போன்றன காணப்படுகின்றன. பெண்கள், சிறுவர்கள் பாதுகாப்பற்ற சூழல், வீட்டு வன்முறை அதிகரித்தல், தற்கொலை, குழு மோதல்கள் அதிகரிப்பு, கொலை, கொள்ளை செய்பவர்களால் உளப்பாதிப்புக்கள் போன்றவை பொருளாதாரச் சீர்குலைவை, கலாச்சார சிதைவை ஏற்படுத்தி வருகின்றன.

எமது சமயமானது அயலவர்களுக்கு உதவும் பழக்கத்தை மேம்படுத்த வேண்டும். உளத்தாக்கங்களால் பாதிக்கப்படும் மக்களுக்கு உடனடியாக உதவும் நிலையங்களை கிராம ரீதியாக நிறுவுதல் வேண்டும். சமயத் தலைவர்களும் சமூகத் தலைவர்களும் அறநெறிகளைத் தமது வாழ்வாக்க வேண்டும். அப்போது தான் நீதி, நேர்மை போன்றவற்றைக் கடைப்பிடிக்கும் நிலை உருவாகும்.

சமூகம் பாதிக்கப்பட்டவர்களுக்கு குழு அமைத்து சமூகப்பணி மூலம் ஒருவருக்கொருவர் உதவும் பண்பை அதிகரித்தல், விழிப்புணர்வுகள் ஏற்படுத்துவதற்கு வளவாளர்களை மேலும் வளப்படுத்தல் போன்றவற்றை சமூகத்தில் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு, சமூகத்தில் நம்பிக்கையை கட்டியெழுப்புவது மிகவும் அவசியமாகத் தேவைப்படுகின்றன.

எனது தீர்வு முயற்சிகளான உள ஆற்றுப் படுத்தல். உள சமூக சேவை, சர்வமத குழுக்கள் மூல மும் சமூகப்பணியாற்றுததல். பெண்கள், சிறுவர்கள், நோயாளர்களுக்கு தனிப்பட்ட ரீதியான உதவிகளை சுயாதீனமாக கடந்த பல ஆண்டுகளாக செய்து வருகின்றேன். குறிப்பாக "நான்" உளவியல் சஞ்சி கைக்கு எழுதி வருகின்றேன். வளவாளராகப் பணிபு ரிந்து சமூக விழிப்புணர்விற்கு உதவி வருகிறேன்" என்கின்றார்.

உளசமூகப் பணியாளர்
ஞெ.சிறோமி

*என்னால் முடியும்!*



"இன்றைய சமூகத்தில் தன் இழப்புக்கள், பிறர் இழப்புக்கள், விபத்தால் உயிர் இழப்புக்கள், உடல் அங்கவீனம், திருமணமுறிவு, வீடு சொத்துக் கள் இழப்பு, பெண் தலைமைத்துவக் கஸ்டங்கள், வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமை, நீதியற்ற சமூக நிலை போன்றவை மலிவுற்றுக் காணப்படுகின்றன. மனிதம், பிறர்நேசம், உதவுதல் போன்றன சார்பாகப் போதித்தல், விழிப்புணர்வூட்டல், நடைமுறைப்படுத் தல் ஆகியவற்றை முன்னெடுக்கலாம். சமூகம் செவி கொடுத்துக் கேட்கவேண்டும். அதுவே உள ஆற்றுப் படுத்தலின் ஆரம்பமாக இருக்கின்றது. ஆறுதல ளிக்கும் தாய்மையாக இன்பத்திலும் துன்பத்திலும் பங்குகொள்ள வேண்டும்.

எனது தீர்வுகளாக பின்வருபவை அமைய லாம். நம்பிக்கை வலுவூட்டல், சுய ஆளுமையை வளர்த்தல், "என்னால் முடியும்" என்ற நம்பிக்கையை உருவாக்குதல், சோம்பலையும் அச்சத்தையும் மனதி லிருந்து நீக்குதல் போன்றவற்றின் மூலம் மனப் பலத்தை உருவாக்கி மகிழ்ச்சிகரமான சூழலை மேம் படுத்தலாம்" என்றார்.

மலர் சின்னையா.

*பங்கேற்றல்*



"இன்றைய சமூக இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பில்லாததால் வக்கிர உணர்வுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இதற்கு மாற்றீடாக பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு உள ஆற்றுப் படுத்தல் செயற்பாடு, சுயதொழில் ஊக்குவிப்பு, போ தைப் பொருள் பாவனை தவிர்ப்பு தொடர்பான விழிப்பு ணர்வூட்டல் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும். வேலையில்லாத இளைஞர், யுவதிகளை சமூகம் ஒதுக்கிப் பார்க்காமல் சமூகத்தில் நடைபெறும் பொது விழாக்கள் கலாச்சார நிகழ்வுகளில் ஈடுபடுத்தி அவர் களை வலுப்படுத்த உதவ வேண்டும். ஓரங்கட்டப்பட்ட மக்களோடு அதிகமாகப் பழகி அவர்களோடு நற்புற வாடி அவர்களது மனநிலைக்கு ஏற்ப வாழனும், முடிந்தளவு அவர்களை சந்தோஷமாக வைத்திருக்க ணும்." என்று மொழிந்தார்.

அ.பஸ்ஷா.

*பொறுப்புக்கள் பகிரப்படல்*



"இன்றைய நவீன உலகத்தின் போக்கால் இளைஞர், யுவதிகள் சீரழிகின்றனர். தவறான பாதை யில் பயணிக்கின்றனர். இதற்கு சமய, சமூக சிந்த னைகள் அவர்களிற்கு போதிக்கப்படல் சிறந்தது. அத்த கையோரிடம் பொறுப்புக்களைக் கொடுத்து சமூகத்தி லிருந்து அவர்களை வேறுபடுத்தாது உள்வாங்க வேண்டும்." என்று அறைகூவல் விடுத்தார்.

சே.ஜெயதிலீபன்.
தாளையடி, உடுத்துறை வடக்கு.

*சமயவழிகாட்டல்*



"இன்றைய வறுமை மற்றும் தொற்றா நோய் களின் தாக்கங்கள், இளம் விதவைகள், காணாமல் ஆக்கப்பட்டோரின் மனைவி போன்றோர் எதிர்நோக் கும் சமூக தாக்கங்களினால் ஏற்படும் உளப் பாதிப்புக் கள் அதிகம். இவற்றுக்கு சமய வழிகாட்டல்கள் போதிய அளவு நடைமுறையில் இல்லை. தொழில் கற்கை நெறிகள் பற்றிய விழிப்புணர்வுகளை, வழி காட்டல்களை ஏற்படுவதன் மூலம் தொழில் வாய்ப் புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

எனது அனுபவத்தின் அடிப்படையில் முதிய வர்கள், சான்றோர்களின் ஆலோசனையைப் பெற்று எது சரியானது என என் மனதிற்குத் தோன்றுகின் றதோ அதைத் தீர்வாகச் செயற்படுவேன்" என்று எடுத்தியம்பினார்.

அ.தாமரைச்செல்வி,
பொலிகண்டி வடக்கு
வல்வட்டித்துறை.

*இளையோர் திசைதிருப்பப்படல்*




இன்றைய இளையோர் சிறுவர்களின் உளத் தாக்கங்கள் சமூக சூழலில் சாதாரண வாழ்க்கையே சிதைந்து உளநெருக்கீடுகளைத் தோற்றுவிக் கின்றன. இவற்றை வழிப்படுத்த வேண்டிய சமய, சமூக அமைப்புக்கள் பாராமுகமாக பழைமையான அணுகு முறையையே கடைப்பிடிப்பதால் உள நெருக்கீடுகள் சிறுவர் துஸ்பிரயோகங்களாகவும், இளையோர் வன் முறையாகவும், சிறுவர் திரும ணங்கள், குடும்பப் பிரிவுகளாகவும், போதைப் பாவ னைகளாகவும் சமூகம் திசை மாறி செல்வதைக் காணமுடிகின்றது.

இதனால் ஆன்மீக ஆர்வம் இளையோரிடம் அருகிவருதல், திசை மாறும் சோடனைகள், வாண வேடிக்கை, வெடி கொழுத்தல், உடையலங்கார வியாபார உத்திகள் போன்றவற்றிற்கு அடிமையாக் கப்பட்டு வருகின்றார்கள். சமூக சமய வழிகாட்டல் அமைப்புக்கள், புதிய அணுகு முறைகள் மூலம் நகர்த்தும் செயற்பாடுகள், கலைப் பயிற்சிகள் மூலம் இரசனைத் தன்மை, மென்மையான தொடர்பாடல் வழிகாட்டும் பயிற்சிகள், உள ஆற்றுப்படுத்தும் நம் பிக்கை ஊட்டல் தளங்களாக முன்னெடுக்க பொது அமைப்புக்கள் முன்வருதலே முக்கியமாகும்.

சிறுவர், இளையோர் மட்டில் நம்பிக்கை யூட்டும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திமேற்கொள்ள முனைகின்றோம். இவை ஒன்றிணைந்த சேவை யாக பரவலாக்க வேண்டும் என்பதே எனதாவல்.

ஞெ.யோசப்பாலா
உளசமூகசீராளன்.

*விழுமியக் கல்வியின் அவசியம்*



நான்கு சமயங்களும் அறநெறியைப் போதிக்கின் றது. மாணவர்கள் அதில் ஈடுபடுவதால் சமூகப் புறள் வுகளிலிருந்து தம்மைக் காத்துக்கொள்ள முடியும். ஆனால் இதற்கு தனியார் கல்வி நிலையங்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். அந்தவகை யில் ஞாயிற்றுக் கிழமைகளிலும் வெள்ளிக்கிழமைக ளிலும் தனியார் கல்வி நிறுவனங்கள் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும். இது விடயத்தில் பெற்றோர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர் கள் அறநெறிக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்தால் குறித்த நாட்களில் தனியார் கல்வியைத் தவிர்க்கலாம். சகல தரப்பினருக்கும் விழிப்புணர்ச்சி அவசியம்.

நாகவிகாராதிபதி ஸ்ரீ.விமலதேரர்

*இளையோர் சிறுவர்களுக்கான விழிப்புணர்வு*



படிப்பை முடித்தவுடன் இளம் பராயத்தினர் சம்பாதிக்க புறப்பட்டு விடுகிறார்கள் இந்த நிலையில் தேவை யற்ற சினேகிதங்கள் சம்மந்தப்பட்டவர்களை சீர ழிக்க காரணமாயிருக்கிறது. எனவே வயதுக்கேற்ற சினேகிதம் அவசியமாகிறது. கல்வியைத் தொடர்ந்து கொண்டே வேலை செய்வதும் நல்லதுதான் இதன் விழிப்புணர்ச்சிதான் அவசியமானது.

அர்ச்சகர்சபைத் தலைவர் கிருபானந்தக் குருக்கள்

# பெண்களும் யோகாவும்

அ.றஜிதா B.A(Hons) M.A(Public admin)

நவநாகரிக உலகில் பல விதமான நவீன உடற்பயிற்சி வகைகள் வந்தாலும் அவற்றினால் உடலுக்கு மட்டுமே பயிற்சி வழங்க முடியும் உடலினையும் மனதினையும் சீராக்க யோகாவால் மட்டுமே முடியும் யோகாசனம் மனதினை ஒருமுகப்படுத்தி உடலினை நேர்படுத்தவும் நேரிய சிந்தனை உடையோராகவும் வாழவைக்க ஆன்றோராகிய சான்றோர் கண்ட கலையே யோகாசனம். இதனை பற்றி பலரிடையே பல கருத்துக்கள் உண்டு அந்த வகையில் பெண்கள் யோகா செய்யலாமா கூடாதா என்ற பிரச்சனைக்கான தீர்வே இன்றைய கட்டுரையாக அமைகின்றது.



இன்றைய உலகில் ஆண்களைவிட பெண்கள் தான் உடல் உள நிலையில் மிகபாரிய பாதிப்புக்குள்ளா கின்றனர் எனவே அவர்கள் யோகாசனம் பயில அவர்களுடைய எல்லா வகையான பிரச்சனைகளும் அற்றுப் போய்விடும். உடற்பயிற்சி மணித்தியால கணக்காக செய்யும் போது கிடைக்காத பயன் பதினைந்து நிமிடங்கள் யோகா செய்வதனால் பெற முடியும்.

பெண்களின் உடலமைப்பு வித்தியாசமானது பிரமனை கலைஞன் என்று கவிஞர்கள் வர்ணிப்பதும் அதனாலோ என எண்ணத்தோன்றுகின்றது அவ்வாறான அழகிய சரீரத்தை கொண்ட பெண் முற்றிலும் பெண் தன்மையுடனும் பெண்ணுக்கே உரிய நளினத்தோடும் மிளிர செய்வதற்கு அவளுடைய உடலில் ஹார்மோன் களை அளவாக சுரக்க செய்வதில் யோக கலைக்கும் பெரும்பங்குண்டு.

ஆண்களைவிட பெண்களுக்கு உடலில் பதினேழு சதவீத கொழுப்பு அதிகம் உள்ளதால் விரைவில் பெண்களின் உடல் பருத்துவிடும் தன்மை கொண்டது அதனை தடுக்க பலவிதமான உடற்பயிற்சிகளில் பெண்கள் ஈடுபடுவதை காணலாம் எனினும் யோகா செய்வதனால் உடலை மட்டுமல்ல மனதினையும் கட்டுக்கோப்பாக வைத்து கொள்ளலாம்.

பருமடைந்த நாள்முதலாக யோகாசன பிரணாயாமங்கள் செய்து வரும் போது திருமணம் ஆன வுடனே குழந்தை பேற்றினை அடைய முடியும் அத்துடன் உற்சாகமாகவும் சிறப்பாகவும் வாழவும் முடியும்.

பெண்களுக்கு மாதவிடாயின் போது ஏற்படும் தலைவலி, மயக்கம் வயிற்றுவலி , இடுப்புவலி , பசியாமை போன்றவற்றுக்கு பிட்யூட்டரி, தைரொயிட் ,ஓவரி போன்ற சதைக்கோளங்கள் கெட்டுப்போவதே காரணமாகும் இவற்றினை சீர்ப்படுத்த தைராய்ட் மூலமாக தான் முடியும் எனவே இதற்கு சிறந்த ஆசனம் சர்வாங்க ஆசனம் இதனை பதினைந்து நிமிடம் முதல் இருபது நிமிடம் வரை தொடர்ந்து செய்துவர இந்நோய் குணமாகிவிடும். இத்துடன் சேர்த்து சிரசாசனமும் செய்து வர மூளைக்கு நல்ல இரத்தோட்டம் ஏற்பட்டு உடல் சிறப்பாக இயங்கத் தொடங்கும்.

பெண்களிற்கு இயற்கை கொடுத்த அற்புதமான சிறப்பே குழந்தை பெற்று சந்ததியை வளப்படுத்தலே ஆகும். பெண்கள் கர்ப்பமாகி முன்னூறு நாட்கள் தவமிருந்து பெறும் குழந்தையினை அவர்கள் இயற்கையாக பெற்று கொள்ளும்போது அவர்கள் காலம் முழுக்க ஆரோக்கியமாக வாழ முடியும் சிசேரியன் மூலம் குழந்தை பெறுவதற்காக போடப்படும் ஊசியின் தாக்கமானது அவர்கள் மரணிக்கும் வரை இருக்கும் எனவே யோகாசனங்களை முறைப்படி செய்து சுகப் பிரசவம் பெறலே நன்மையாக அமையும்.

கரு தரித்த பின்னர் கருப்பை பலமில்லாத காரணத்தினால் கருசிதைகின்றது இதை விட குழந்தை ஊனமாகவும் பிறக்கும் வாய்ப்புக்களும் உண்டு. இதற்கு கருவுற்ற தாய்மார் எடுக்கின்ற மருந்து வகைகளும் காரணமாகின்றது. கர்ப்பகாலத்தில் நோய்கள் விரைவில் தாக்கத்தை ஏற்படுத்தும் அவ்வாறில்லாமல் சிறப்பாக வாழ யோகாசனம் வழி காட்டும். கருச்சிதைவு ஏற்படாமலிருக்க வயிற்று பகுதியில் இரத்த ஓட்டம் அதிகரிக்க தனுராசனம்,கலாசனம், சிவலிங்காசனம், மற்றும் பச்சிமோத்த ஆசனமும் அவசியம் செய்ய வேண்டும்.

மாதவிடாய் காலத்தில் பெண்கள் ஆசனங்களினை செய்ய கூடாது. கருவுற்ற பெண்கள் முதலிரண்டு மாதமும் எல்லா ஆசனங்களினையும் செய்யலாம் மூன்றாவது மாதத்தில் தனுராசனம், யோகமுத்திரா, ஆறாவது மாதம் சிரசாசனம்,



கலாசனம்,அர்த்த கலாசனம் போன்றவற்றை செய்ய கூடாது. ஏட்டாவது மாதம் சர்வாங்க ஆசனத்தை நிறுத்தி விபரீதகரணி மட்டும் செய்யலாம் ஒன்பதாவது மாதத்தில் எந்த ஆசனமும் செய்ய கூடாது நாடி சுத்தி மட்டும் செய்யலாம்.


மேற்குறிப்பிட்ட ஆசனங்கள் வயிற்றை அழுத்தி செய்வதனால் அது குழந்தையின் merit பாதிக்கும் என்பதால் இவ்வாறாக குறிப்பிட்டுள்ளனர். விஞ்ஞானம் வளராத காலப்பகுதியில் எம் முன்னோர் அறிவிற் சிறந்தோராக விளங்கினர்.

அதிக குழந்தை பெற்ற காரணத்தா ஆதிக குழந்தை பெற்றகாரணத்தாலும் ஹார்மோன் குறைவினாலும் பெண்களுக்கு கருப்பை தன் இடத்தை விட்டு இறங்கி அவஸ்தையை கொடுக்கும் இதனை நீக்க சர்வாங்க ஆசனமும் சிரசாசனமும் யோகமுத்திராவும் செய்து வர வேண்டும்.

சில பெண்களுக்கு குழந்தை குறைபாடுள்ளதாக பிறக்கின்றது அதனை தடுக்க பெண்கள் நாடி சுத்தி செய்வார்களேயாயின் சிறந்த பலனை பெற்று கொள்ள முடியும் இதனை திருமந்திரத்தில் தெளிவாக கூறியுள்ளது.

தாய்ப்பால் குறைவாக உள்ள பெண்கள் சிரசாசனம், விபரீத கனனி ஆசனங்களை செய்துவர தாய்ப்பால் நன்றாக சுரக்கும் பெண்கள் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுப்பது குழந்தைக்கும் ஆரோக்கியம் தாய்க்கும் ஆரோக்கியம்.

காலம் கடந்தும் பருவமுறாத பெண்கள் யோகாசனம் செய்வதனூடாக உடலினை செம்மை படுத்தி பூப்படையலாம் அத்துடன் பெண்களுக்கு ஏற்படும் இடுப்பு வலிக்கான காரணம் அட்ரினல் சுரப்பி சுரப்பது குறைவது இப்பிரச்சனையை நீக்க அர்த்தகலாசனத்தை தொடர்ச்சியாக செய்ய பலன் கிடைக்கும்.



இதைவிட பெண்களுக்கு கற்ப காலத்தில் ஏற்படும் இரத்த அழுத்தம் மனச்சோர்வு போன்றவற்றுக்கு தியானம் சிறந்த தீர்வாக அமையும் தொடர்ந்து தியானம் மூச்சுப்பயிற்சி செய்து வர அழகிய குழந்தையினை பெற்றெடுக்க முடியும்.

பெண்களை தாக்கும் மார்பக புற்று நோயை முறையான சுவாசப்பயிற்சி யோசனங்களின் மூலம் நிவர்த்தி செய்யலாம்.

தொடர்ந்தும் ஆசனங்கள் பிரயாணாமம் மற்றும் நாடி சுத்தி போன்றவற்றை செய்து அழகான ஆரோக்கிய மான பெண்களாக வாழ்வதுடன் ஆரோக்கியமான கூன் குருடு பேடு நீங்கிய சந்ததியினை வழங்கி பூமியில் சிறப்பாக வாழ யோகக் கலை உதவும் என்பதில் ஐயமில்லை.

# ராகஸ்வரம் கலைமன்றத்தின்

## கலை, கல்வி வகுப்புக்கள் புதிய பிரிவுகள் ஆரம்பம்

ராகஸ்வரம்

**துணைப்பாடங்கள்**
ஓகன்,
ஆர்மோனியம்,
ஒக்ரோபாட்,
றம்ஸ்,
கொங்கொட் றம்ஸ்
கிற்றார்,
மிருதங்கம்,
தபேலா,
வயலின்,
வீணை,
புல்லாங்குழல்,
வாய்ப்பாட்டு,
நடனம்,
ஓவியம்

**சிறப்புப் பாடங்கள்**
யோகாசனம்,
நாடகமும் அரங்கியலும்,
ஆயுர்வேத மருத்துவம்,
ஊடகவியல்,
ஆங்கிலம்,
சிங்களம்,
போட்டோகிராபி,
முரண்பாட்டு நிலைமாற்றக் கற்கைநெறி





தரம் 01 – 04 வரையான மாணவர்களுக்கான ஆங்கிலப் பயிற்சி
தரம் 05 முதல் 10 வரையான மாணவர்களுக்கான தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், கணனி வகுப்புக்கள்
G.C.E O/L மாணவர்களுக்கான சகல பாடங்களும் துறைசார்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்.

**பயிற்சி நடைபெறும் இடங்கள்**
யாழ்பஸ் தரிப்பு நிலையத்திற்கு அண்மையில்
இல.261/2, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
மற்றும்
இல.28/1, ஆ.வ வீதி, கொழும்புத்துறை.
தொ.பே.இல.077-6510375, 076-2963944

---

ஈழத்து முன்னணி கலைஞர் ஒன்றிணைவில் திருவிழா, பெருவிழாக்களை அலங்கரிக்க-

## யாழ் ராகஸ்வரம் இசைக்குழு

திருமண விழா, பிறந்தநாள் விழாக்களுக்கான
கறோக்கி மற்றும் D.J இசை









உங்கள் விழாக்களில் எங்கள் இசை– அழைத்து மகிழுங்கள்
077-6510375

---

## ஊடகப் பயிற்சிப் பட்டறை

ராகஸ்வரம் கலைமன்றத்தின் ஏற்பாட்டில் எழுத்துத் துறை மற்றும் ஊடக ஒளிப்படத்துறையில் பிரகாசிக்க விரும்புவோருக்கான இலவச பயிற்சிப் பட்டறைகள் துறை சார்ந்தவர்களால் நடாத்தப்படவுள்ளது.
இதில் பயன் பெற விரும்புவோர்
**0762963944**
எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு
மேலதிக விளம்பரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்,
அல்லது
ராகஸ்வரம் கலைமன்றம்
28/1, ஏ.வி வீதி,
கொழும்புத்துறை.
எனும் முகவரிக்கு விண்ணப்பிக்க முடியும் என மேற்படி மன்றத் தலைவர் திருமதி ஜெமல்டா ஜெபரட்ணதாஸ்

---

நான் உங்கள் **யாழ்களரி** தொடர்ந்தும் வெளிவருவேன்,

என்னை நீங்கள் பலப்படுத்துங்கள், எனக்கான பங்களிப்பு 30/00 மட்டுமே.
இலவசமாக நீங்கள் என்னைப் பெற்றிருந்தால் எனது வங்கிக் கணக்கிலக்கத்தின் ஊடாக உங்கள் பங்களிப்பை அனுப்பி வைக்கலாம்.

ராகஸ்வரம் கலைமன்றம் – BOC – 80954412

---

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றின் கீழ்
யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் ஊடாகப் பதிவு செய்யப்பட்ட ராகஸ்வரம் கலைமன்றம் பணிகளுக்கான

## பகுதிநேர/ முழுநேர இணைப்பாளர்கள் தேவை

கொழும்புத்துறை, பாசையூர், திருநகர், குருநகர், நாவாந்துறை, சோனகதெரு, கொட்டடி, கொய்யாத்தோட்டம், பாண்டியன்தாழ்வு, எழிலூர், வண்ணார்பண்ணை போன்ற ஊர்களைச் சேர்ந்த நாடகம், நாட்டுக்கூத்து, சங்கீதம், ஓவியம், எழுத்துத் துறை போன்ற கலைத்துறைகளில் ஈடுபாடு உள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியும்.
பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிப்போருக்கு நேர்முகத்தேர்வு பற்றிய விபரம், கொடுப்பனவு விபரங்கள்

**ராகஸ்வரம் கலைமன்றம்,
28/1 ஆனந்தன் வடலி வீதி,
கொழும்புத்துறை. யாழ்ப்பாணம்.**

# பிறந்த எண்களும் அவைகளுக்கேற்ற தொழில்களும் பழக்க வழக்கங்களும்

ஜோதிர்வித்யாரத்னா V.A சிவராசா B.A,BPhil, Dip.in.Edu
56, அம்மன்வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொ.பே.:021 222 8708

## ஜோதிட விஞ்ஞானம்



ஒவ்வொரு எண்களுக்கும் பொருத்தமான தொழில்களும், பழக்கவழக்கங்களும் இங்கே பார்க்கலாம். ஆனால் பொதுவான பலன்களே காரணம். விதி எண்களுக்கு ஏற்ப சில மாற்றங்கள் இருக்கலாம்.

**எண் -1**

எண் ஒன்றில் பிறந்தவர்கள் (1 அல்லது 19அல்லது 28) பொதுவாக எந்தவித பொறுப்பையும் ஏற்றுக் கொள்வார்கள். சொல்லியவாறு நடந்து கொள்வதில் ஆர்வம் உள்ளவர். பெரும்பாலும் உண்மையாகவும் உறுதியாகவும் இருப்பர். மற்றவர்கள் நம்மைப் புகழ வேண்டும், மதிக்க வேண்டும் என்று நினைப்பவர்கள். ஒளிவு மறைவு இல்லாமல் பேசுபவர். முகஸ்துதி செய்யத் தெரியாதவர், தனக்குட்பட்டதை அப்படியே சொல்லக் கூடியவர். அலுவலக நிர்வாகங்கள், எதிலும் தலைமைப் பதவி கலைத்துறைகளில் நல்ல முன்னேற்றம் காண்பர். மறைமுகமாக அல்லது நேரடியாகவோ ஆசிரியராகவும் சிறப்பார்கள். நம்பிக்கைக்கு உரிவவராக இருப்பர். வர்த்தக அமைப்புக்களிலும் தலைமையிடத்திலும் இருப்பின் சிறப்பான முன்னேற்றம் காண்பர். இவர்களுக்கு நல்ல ஆடை, அணிகலன்கள், ஊர்சுற்றுவது போன்றவற்றில் நாட்டமிருக்கும் எதையும் மிக சீரியஸாகஎடுத்துக் கொள்ளும் சுபாவம் உள்ளவர். பெரும்பாலும் பொசசிவ் தன்மையுள்ளவராக இருப்பர்.

**எண் -2**

எண் 2-ன்ஆதிக்கத்தில் உள்ளவர்கள் தனித்துச் செய்வதை விட ஒரு குரூப்பில் சேர்ந்து எதையும் செய்வது நல்லது. மனசு சிறிய சிறிய விஷயங்களுக்கும் சஞ்சலப்படக் கூடியவர்கள். மருத்துவம், சமுதாய அமைப்பு, ஆலோசனை அமைப்புமையங்களிலும் கப்பல் மூலம் ஏற்றுமதி, இறக்குமதி, கப்பல் வாணிபம் போன்றவை சிறப்பாக அமையும். நீச்சல், மீன் பிடிப்பது சும்மாவாக ஓய்வு எடுப்பது இவர்களுக்கு மிகவும் பிடிக்கும். பெரும்பாலும் தன்னம்பிக்கை குறைவாக உள்ளவராக இருப்பார்கள். வக்கீல் தொழிலும், ஆசிரியர் தொழில்களிலும் ஈடுபடலாம். பெரும்பாலும் சந்தர்ப்பவாதிகளாகவும், சந்தேகப் பேர்வழிகளாகவும் இருப்பர். ஆனால் நண்பர்களுக்கும் தமக்குப் பிடித்தவர்களுக்கும் நல்ல உதவி செய்யக் கூடியவர்.

**எண் -3**

எண் மூன்று ஆதிக்கம் உள்ளவர்கள் ஆசிரியர்களாகவும், எழுத்தாளர்களாகவும், கண்டுபிடிப்பாளர்களாகவும், அரசியல் தலைவராகவும், கோவில் தர்மகர்த்தாவாகவும், சிறந்த பேச்சாளராகவும் இருப்பார்கள். எந்த அமைப்பையும், நிறுவனங்களையும் ஏற்படுத்தக் கூடியவர்கள். எப்போதும் மக்களுடனே இருப்பார்கள். மனிதநேயம் உள்ளவர்கள் மற்றவர்களுக்காக உழைப்பவர்கள், பரந்த மனப்பான்மை உடையவர்களாக இருப்பர். எப்போதும் நாட்டையும், நாட்டு மக்களையும் சிந்தித்தவாறு இருப்பார்கள். ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செம்மையாக செய்யக் கூடிய ஆற்றலும் அறிவும் படைத்தவர். நல்ல சிந்தனையாளராக இருப்பர். சிலர் இராணுவத்திலும், காவல் துறையிலும் இருப்பர். மக்கள், சமுதாயம், மதம், சட்டம் போன்றவற்றில் நாட்டம் உடையவராக இருப்பர். இயல்பாகவே எதிர்காலத்தை அறியக்கூடியவராகவும் வாக்கு பலிதம் உள்ளவராகவும் இருப்பர். எப்போதும் நன்றி உள்ளவராகவும் சட்ட திட்டத்திற்கு உட்பட்டு நடக்கக் கூடியவர். மற்றவர்களும் அவ்வாறே இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பர்.

**எண் -4**

இவர்கள் நல்ல சிந்தனையாளராகவும் விமானம், ரேடியோ, டெலிவிஷன், மின்சாரம் மற்றும் இயந்திரங்கள் போன்ற துறைகளில் வல்லுநராக இருப்பர். விஞ்ஞானியாகவும், மனோதத்துவ நிபுணராகவும், சமுதாய சீர்திருத்தங்களில் அக்கறை உள்ளவராகவும் இருப்பர். இவ்வெண்ணினர் சிறந்த அரசியல் தலைவராகவும் இருப்பர்.

**எண் -5**

ஐந்து எண்காரர்கள் அதிக நண்பர்கள் உடையவர்களாக இருப்பார்கள். எதையும் மிக வேகமாக செய்யக்கூடியவர்கள், சிந்திக்கக் கூடியவர்கள். வாணிபத்திலும், அரசியலிலும் மிக உயர்ந்த நிலையில் இருப்பார்கள். கல்வி நிலையங்களில், நூல் வெளியிடுதல் போன்ற அமைப்புக்களில் சிறந்தவர்களாக இருப்பார்கள். நன்றாகப் பேசுவார்கள். எப்போதும் தன்னுடைய நிலையை மாற்றிக் கொண்டேயிருப்பார் கள். எந்த ஒரு சூழ்நிலைக்கும் தன்னை மாற்றிக் கொள்ளக் கூடியவர். மிக வித்தியாசமாக செயல்புரியக் கூடியவர். பேரும், புகழும் சம்பாதிக்கக் கூடியவர். இவர்கள் எத்துறையிலும் நல்ல நிலைக்கு உயரக் கூடியவர்கள். ஆனால் தங்கள் திட்டங்களைச் செய்து முடிப்பதற்குள் மற்றவர்களுக்குச் சொல்வதன் மூலம் தோல்வியைத் தான் அடைவார்கள்.

**எண் -6**

இவ்வெண்காரர்கள் கலைத்திறமையும், ஆர்வமும் உடையவர்கள். இவர்கள் நல்ல கலைஞர்களாகவும், ஆடைஆபரணங்களை விற்பவர்களாகவும், வங்கி மற்றும் ஆசிரியர்களாகவும் திகழ்வார்கள். எப்பொழுதும் ஏதாவதொரு வேலையை செய்து கொண்டேயிருப்பார்கள். சுறு சுறுப்பாக இருப்பார்கள். நேர்மையானவர்களாகவும், சொல்வதைச் செய்பவர்களாகவும் இருப்பார்கள். வீட்டிற்கான அலங்கார பொருட்கள் மற்றும் தோட்டக் கலையிலும் ஆர்வம் உள்ளவர்களாக இருப்பார்கள். அழக சாதனங்களில் ஈடுபாடு உடையவர்களாகவும் அதை விற்பனை செய்பவர்களாகவும் இருப்பார்கள். மற்றவர்களை இனிமையாக உபசரிப்பார்கள்.

**எண் -7**

ஏழு எண்காரர்கள் மிகவும் உணர்ச்சி வசப்படக் கூடியவர்கள். எளிதில் மனக்கலக்கம் அடையக் கூடியவர்கள். இவ்வெண்காரர்கள் நல்ல ஜோதிடர்கள், கலைத்துறையில் சிறந்தவர்களாகவும், மருத்துவராகவும், மருத்துவமனையில் மற்றும் மருந்துக் கடைகளில் பணி புரிபவராகவும் இருப்பார்கள். எதிர் காலக் கணிப்பில் வல்லவராகவும், அன்புக்கு அடிமையாகவும் இருப்பர். தனிமையில் இருப்பார்கள். எதையும் நன்கு யோசித்து செய்வார்கள். எளிதில் மற்றவர்களை நம்ப மாட்டார்கள். அப்படியே நம்பினாலும் அவர் நல்லவரா, கெட்டவரா என்பதை அறிய மாட்டார்கள்.

**எண் -8**

எட்டாம் எண்காரர் வித்தியாசமாக இருப்பார்கள். நல்ல புத்திசாலியாகவும், பலசாலியாகவும் அல்லது மந்த புத்திக்காரராகவும், பலவீனமாகவும் இருப்பார்கள். இவர்கள் மத்தியத் தரமாக இருப்பதில்லை. ஒன்று மிக உயர்ந்தவர்களாக அல்லது ஞானியாகவும், மதத் தலைவர்களாகவும், அல்லது பெரிய குற்றங்களைச் செய்பவர்களாக இருப்பார்கள். இவர்கள் எண்ணெய் நிறுவனங்கள், ரியல் எஸ்டேட், கடல் கடந்த வாணிபம் போன்றவற்றில் சிறப்பாக இருப்பார்கள். ஆனால் பலவற்றில் ஈடுபடுவார்கள். எதையும் தொடர்ந்து செய்ய மாட்டார்கள். மிகப்பெரிய பணக்காரர்களும் அதேபோல் பரம ஏழைகளும் இந்த மண்ணில் இருப்பார்கள்.

**எண் -9**

ஒன்பதாம் எண்காரர்கள் மிக எளிதில் உணர்ச்சி வசப் படக் கூடியவர். மற்றவர்களை நேசிக்கக் கூடியவர்கள். இவர்கள் காவல்துறை, இராணுவம், கலைத்துறை, ரியல் எஸ்டேட், இயந்திரத் தொழில்நுட்ப வல்லுநர் மேலும் அரசியல் தலைவராகவும் இருப்பார்கள். நாட்டுப் பற்று உடையவராகவும் இருப்பார்கள். இரத்தின வியாபாரிகளாகவும் திகழ்வார்கள். பொது விவகாரங்களில் தலையிடுவதும் பொது விஷயங்களுக்குப் போராடுவதும் இவர்கள் இயல்பு.

**குறிப்பு**

இவை யாவும் பொதுவான பலன்களே. அவர்களுடைய விதி எண்களுக்கேற்ப மேலே கூறப்பட்ட பலன்களில் மாற்றம் இருக்கலாம்.

---

# சோதிடத்தில்...
## பொறுக்கிய முத்துக்கள்

01) பெண்குழந்தைகளுக்குப் பெயர் வைக்கும்போது பிதாவின் முன் எழுத்தும் சேர்க்கப்பட வேண்டும்.

02) ஒருவரின் பெயர்கள்/கையொப்பத்தின் கூட்டுத்தொகை 2ல் அமையின் சிக்கல் 3 எனின் கவலை, சுமை, ஏக்கம், 4 என்றால் பகைமை, 7 வரின் சோதனை, 8 என்றால் துர் அதிர்ஷ்டங்கள் ஏற்பட்டுவிடும்.

03) ஜாதகத்தில் எட்டாம் இடத்தில் சந்திரன் இருப்பின் நீரினால் கண்டம் ஏற்படும் அபாயமுண்டாகும்.

04) விவாகம்/தாலிபூணல் ஆகிய தினங்களில் கூட்டெண் 4 வரின் குடும்பத்தில் குழப்பத்தையும், 5எனின் விவாக வாழ்வு பயனற்றுப் போவதையும், 8 வந்தால் அதிர்ஷ்டகரமற்றதாகவும் அமைந்து விடும்.

05) உங்களின் பெயர் அல்லது கையெழுத்து 51ம் எண்ணில் வரின் கொலை செய்யக் கூடிய விரோதிகள் ஏற்படுமாகையினால் பிறருடன் நட்பையும், ஒத்துப் போகும் தன்மையையும் வளர்த்துக் கொள்ளுங்கள்.

06) ஏழாம் எண்ணில் (7/16/25) பிறந்தவர்களுக்கு திருமண வாழ்வில் கசப்பு ஏற்படும் என்பது கட்டுக்கதையாகும்.

07) மூல நட்சத்திரத்தில் பிறந்த பெண் விவாகஞ் செய்யும் மணமகனின் தகப்பனார் , தாயாருக்கு கெடுதி விளையும் என்பதையும் நம்ப வேண்டாம்.

08) ஆயிலிய நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இளவயதுத் திருமணத்தை இயன்ற வரை மேற்கொள்ள வேண்டாம்.

09) ஜாதகத்தில் 1/2/4/7/8/12 ஆகிய இடங்களில் செவ்வாய் இருப்போர் மணவாழ்வு சிறப்படைய செவ்வாய் தோஷமுடையோரையே திருமணம் செய்யுங்கள்.

10) ஜாதகத்தில் இராகு, கேது சர்ப்பக் கிரகங்களுக்குள் ஏனைய கிரகங்கள் அடங்கி இருப்பது காலசர்ப்ப தோஷமாகும்.இதனால் விவாகம் முதலியன கேள்விக்குறியாகும். நாக விளக்கினை வீட்டில் சாமி அறையில் வைத்து வழிபட்டு வர இத்தோஷம் விலகி நன்மைகள் ஏற்படும்.


11) வலது அல்லது இடதுகையில் சந்திரமேட்டில் கறுப்பு மச்சம் இருப்போர் தண்ணீர் தத்தில் விழிப்பாக இருங்கள்.


12) ஜாதகத்தில் ஆணின் சனீஸ்வரன் பெண் ஜாதகத்தில் உள்ள சந்திரனை 3/7/10ம் பார்வைகள் பார்ப்பின் குடும்பப் பிரிவினை நிச்சயம் எதிர்பார்க்கவும்.

13) பெண்ணின் ஜாதகத்தில் உள்ள சந்திரன் விவாகம் செய்யும்போது மணமகனின் சனீஸ்வரனை 3 அல்லது 7 அல்லது 10ம் பார்வை பார்ப்பின் மண விலக்கு ஏற்படலாம்.

14) ஜாதகத்தில் 5 அல்லது 9ம் இடத்தில் இராகு/கேது/சனி இருப்பின் புத்திரதோஷம் ஏற்படலாம்.

15) ஜாதகத்தில் லக்கினத்தில் இருக்கும் சூரியன் 7ம் பார்வை பார்க்குமிடத்து விவாகத்தில் வெற்றி வாய்ப்புக் குறைவடையும்.




பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்



# முன்னின்று தேசம் காக்கும்
# உங்களுக்காய் முன்னிற்பேன்



X

6

நான்

# பவதாரணி

ராஜசிங்கம்

இப்பத்திரிக்கை யாழ்களரி நிறுவனத்தால் 01.08.2020 அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்றது.